இணைப்பு 1

(15-ம் பக்கத்தில் 731 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

(அ) & (இ) : முதற்கண் மினி சூப்பர் மார்க்கெட்டிற்கு ஏழு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. பின்பு பொது மக்களின் முறையீட்டின் காரணமாக மூன்று தனி நபர்கள் ஐந்து வார்டுகளுக்கு நியமிக்கப்பட்டனர். ஆனால், மினி சூப்பர் மார்க்கெட் அதிகாரிகள் முறையீட்டின் பேரில், இந்த மூன்று தனி நபர்களின் நியமன உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டது.

இப்பொழுது மேற்கண்ட ஏழு வார்டுகளில் மினி சூப்பர் மார்க்கெட் மூன்று வார்டுகளிலும், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தினாலும் நிர்வாகம் செய்யப்படும் கடை மற்ற நான்கு வார்டுகளிலும் விநியோகம் செய்துவருகின்றன.

லாயல் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு இரண்டு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. நெருக்கடிபற்றி பொதுமக்கள் முறையிட்டனர். ஆனால், இப்பண்டகசாலை வேறு ஒரு கடை திறக்க இயலாதெனக் கூறியதை அடுத்து ஒரு வார்டுக்கு திரு. செல்வராஜ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

லட்சிமி மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு நான்கு வார்டுகளுக்கு விநியோக உரிமை வழங்கப்பட்டது. இதில் 18 ஆம் எண் தெரு மக்கள், ஆலைத் தொழிலாளர்களுக்கு மட்டும் விநியோக முறையில் சலுகை காட்டுவதாகக் கூறி வந்த முறையீட்டின் பேரில் பொதுமக்களுக்கு மட்டும் விநியோகிக்க திரு. கொம்பைய்யா என்பவருக்கு உரிமை வழங்கப்பட்டது.

அண்மையில், ஏற்கனவே இயங்கிவரும் கூட்டுறவுக் கடைகளின் செயல் திறனை விரிவாக்கவும், புதிய கூட்டுறவுக் கடைகளை லெவி சர்க்கரை விநியோகப் பொறுப்பில் ஈடுபடுத்தவும் வேண்டுமென அரசு பிறப்பித்த ஆணையையடுத்து, கோவில்பட்டி நகரில் மேற்குறிப்பிட்ட தனிப்பட்ட வியாபாரிகளையும் நீக்கிவிட்டு அவர்களுக்குப் பதிலாக கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமர்த்தப்பட்டுள்ளன. ஆக தற்போது கோவில்பட்டி நகரில் லெவி சர்க்கரை விநியோகப் பணி முழுவதும் உணவுப் பொருள் வழங்கல் கழகமும், கூட்டுறவுப் பண்டகசாலைகளும் மட்டும் செய்து வருகின்றன.